2. சிறப்புக் கவன ஈர்ப்பு.

(அ) உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி அலுவலகத்திற்குள் நுழைந்து அலுவலக மேலாளரைத் தாக்கியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையமுன்தினம் எங்களுடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் முடிந்ததற்குப் பின்னால் எங்களுடைய கட்சி அலுவலகத்தில் நுழைந்து அலுவலக மேலாளர் ராஜகோபாலைத் தாக்கியிருக்கிறார்கள். அவர் கொடூரமான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு, இரையாக்கப்பட்டு, இன்றையதினம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். நான் அதை ஒரு பிரச்சினையாக இங்கே எழுப்புவதற்குக் காரணம் ஏதோ ஒரு மேலாளர், அதாவது அலுவலக மேலாளர் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார் என்பதல்ல. 'இங்கேதானே கூட்டம் நடைபெற்றது. எல்லோரும் போய்விட்டார்களா, இங்கேதானே சதி செய்தீர்கள், நீ தானே சதிக்கு உடந்தை, நீ தானே சொல்லித் தருகிறாய் என்று சொல்லி அவர் அடிக்கப்பட்டிருக்கிறார். அடித்தது யார் என்று சொன்னால் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தாமரைக்கனி. இது ஏதோ ஒரு சம்பவமாக இல்லை. உங்களுடைய கண்காணிப்புக்குள்ளே வருகிறது. அதாவது அந்த வளாகம் முழுவதும் உங்களுடைய கண்காணிப்புக்குள்ளாக வருகிறது. இதற்கு முன்பு சட்டப்பேரவை உறுப்பினர் விடுதியிலே, எங்களுடைய உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள், அதாவது ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த திரு. ஈஸ்வரன் அவர்கள் அதே சட்டமன்றப் பேரவை உறுப்பினராலே தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறார். அதற்கு முன்பு சட்டசபைக்குள்ளே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்குத்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள் (குறுக்கீடு) இல்லை என்றால் விவாதம் கூடிக்கொண்டே போகும். (குறுக்கீடு) உங்களுடைய அலுவலகத்தில் நடந்த பிரச்சினை பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இதுபோல் ஒரு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தினசரி சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேரையும் அச்சுறுத்துகிற தன்மையில், மிரட்டுகிற தன்மையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். சட்டப் பேரவையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் சுதந்திரமாக, அச்சமின்றிச் செயல்படுவதற்கு இங்கே இடம் இருக்கவேண்டும். அந்த உரிமை ஒவ்வொரு சட்டப்பேரவை உறுப்பினருக்கும் இருக்கவேண்டும். சட்டப்பேரவை உறுப்பினர்களை அச்சுறுத்துவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. குறிப்பாக சட்டப்பேரவை நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில்

1994 ஏப்ரல் 6] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

காங்கிரஸ் கட்சி சட்டமன்ற அலுவலகத்தில் ஒரு சட்டமன்றப் பேரவை உறுப்பினரே வேறு இரண்டு பேர்களோடு நுழைந்து தாக்குவதும், அங்கே இருக்கிற மேலாளரைத் தாக்கிக் காயப்படுத்துவதும் அங்கே இருக்கிற நாற்காலி மற்றவற்றை உடைப்பதும் நடைபெற்றிருக்கிறது. இதுகுறித்து வெளியே வழக்கு தொடரப்பட்டிருந்தாலும் கூட நாம் இதைக் கொஞ்சம் கடுமையாகப் பார்த்து இதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நடவடிக்கையைப் பொறுத்தவரையில் நான்கூடச் சொல்லவில்லை. அவை முன்னவர் அவர்களே சொல்லலாம். ஏனென்றால், அந்த உறுப்பினர் ஜனநாயகத்திற்கே ஒரு சவாலாக இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறார். சட்டப்பேரவையில் யார்மீது வேண்டுமானாலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் கைவைக்கலாம் என்கிற எண்ணத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். பார்ப்பவர்களை எல்லாம் மிரட்டுகிறார். காங்கிரஸ்காரனாக இருந்தால் வெளியிலே வா உன்னைப் பார்த்துவிடுகிறேன் என்று அன்றையதினம்கூட பேசியிருக்கிறார். அன்றையதினம் காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்களை பார்க்க வந்தவர்கள் 2,3 பேர்கள் தாக்குதலுக்குள்ளாகி இருக்கிறார்கள். அப்படி தொடர்ந்து ஒரு உறுப்பினர் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார். அந்த உறுப்பினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை அவை முன்னவரே சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்து அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது. நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். பார்த்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

முற்பகல் 11 - 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தச் சம்பவம் நடந்தவுடன் எனக்குத் தொலைபேசி வாயிலாக அந்தச் செய்தியைச் சொன்னார். சொன்னவுடன் நான் உடனடியாக காவல்துறையினருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குமே அந்தத் தகவலை எடுத்துச் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் மிகக் கடுமையாக இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதற்கான நடவடிக்கையை எடுத்து, அந்தச் செய்தியை நேற்றைய தினம் பேரவைக்கு நான் அறிவித்து இருக்கிறேன். எனவே இந்தச் சம்பவம் என்னுடைய வளாகத்திற்குள்ளே நடந்த காரணத்தினாலே உடனடியாக அந்தத் தகவல் வந்தவுடன், தாங்கள் எனக்கு சொன்னவுடன் – நான் அந்த நேரத்திலே கேட்டபோதுகூட காவல் துறையினரிடத்திலே அந்த நேரத்திலே புகார் எதுவும் வந்து சேரவில்லை – ஆனால் அடிபட்டவர் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார். மருத்துவ மனையிலே அவர்களிடத்திலே ஸ்டேட்மெண்ட் வாங்கி இந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடுமையான நடவடிக்கை

என்பதை நான் நேற்றையதினம் பேரவைக்கே அறிவித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இது தொடர்பாகத் தன்னுடைய கருத்தை இங்கே தெரிவிக்க இருக்கிறார்கள்.

* **மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி இந்திரா காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து, அந்த அலுவலகத்தின் மேலாளரைத் தாக்கி காயப்படுத்திய சம்பவத்தைப் பற்றி பல்வேறு செய்தித் தாள்கள் பல வகைகளில் செய்திகளை வெளியிட்டுள்ளன. சில செய்திகள் மிகைப் படுத்தியும், சில செய்திகள் யூகத்தின் பேரிலும் வெளியிடப்பட்டு இருந்ததால், உண்மை நிலவரத்தை இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

4.4.1994 அன்று இந்திரா காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியின் அலுவலகத்தில் மேலாளராக பணிபுரியும் திரு.கே.எஸ். ராஜகோபால் என்பவர் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் முடிந்த பின்பு கதவை உட்புறமாகத் தாளிட்டு உள்ளேயே இருந்துள்ளார். இரவு *8* மணி அளவில் வெளிக் கதவின் மீது யாரோ கல்லை எறிகின்ற சத்தத்தைக் கேட்டதும் அவர் கதவைத் திறந்து பார்த்துள்ளார். வெளியே நின்றிருந்த ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அத்துமீறி அந்த அலுவலகத்தில் நுழைந்தது மட்டுமன்றி, அவரைத் திட்டியுள்ளார். மேலும் அவரைத் தள்ளிவிட்ட காரணத்தினால் அவர் கீழே விழுந்துள்ளார். பக்கத்திலேயிருந்த ஸ்டூல் சேர்-ஐ எடுத்து திரு. ராஜகோபால் அவர்களைத் தாக்கியதால், திரு. ராஜகோபால் அவர்களின் தலையிலும், கையிலும், கால்களிலும் காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிகிறது. உடனடியாக திரு. ராஜகோபால், திரு. தாமரைக்கனி தன்னை அடித்ததாகக் கொடுத்த புகாரின் பேரில் அக்காவல் நிலையக் குற்ற எண் *23/94*-ல் இந்திய தண்டனைச் சட்டம் *448, 341, 337, 324* மற்றும் *307* ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த திரு. ராஜகோபால் அவர்கள் அரசு ராயப்பேட்டை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார். சட்டமன்ற உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் திரு. ராஜகோபால் அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதாகத் தெரிகிறது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்களை, காவல் துறையினர் நேற்று இரவு *11.30* மணியளவில் அவர் இல்லத்தில் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றுள்ளனர்.

5.4.1994 அன்று, அவர் தலைமை மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் முன்பு,– நேற்று என்பதை, நேற்றைய் முன்தினம் என்று

திருத்திக்கொள்ளவும்,-5.4.1994 அன்று அவர் தலைமை மெட்ரோ பாலிட்டன் மாஜிஸ்ட்ரேட் முன்பு ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மேலும் 2 பேர்களை காவல் துறையினர் தேடி வருகின்றனர். சில செய்தித் தாள்களில் இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற அலுவலகம் முழுவதும் நாசம் செய்யப்பட்டது என்றெல்லாம் செய்திகள் வெளி வந்துள்ளன.

இப்போது பேசிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பொருட்கள் எல்லாம் நாசம் செய்யப்பட்டன என்று கூறினார். அலுவலக மேலாளர் திரு. ராஜகோபால் கொடுத்த புகாரைத் தவிர வேறு எந்த ஒரு புகாரும் காவல்துறைக்கு வரவில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் தொலைபேசியில் சென்னை மாநகர காவல் துறை ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு காங்கிரஸ் அலுவலகத்தை நிர்மூலப்படுத்தி விட்டார்கள் என்று கூறியுள்ளார்.

(முற்பகல் 11—30

உடனடியாக சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் ஒரு துணை ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகியோரை அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு விவரங்களைத் தரும்படிப் பணித்துள்ளார். அந்த இரண்டு அதிகாரிகளும் அந்த இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்ட பின்பு திரு. ராஜகோபால் தாக்கப்பட்டதைத் தவிர அலுவலகத்திற்கு வேறு எந்தவிதமான சேதமும் விளைவிக்கப்படவில்லை என்பதையும் கண்டிருக்கிறார்கள். அலுவலகத்தின் கண்ணாடித் கதவுகள் நல்ல நிலையில் இருந்தன. பின்னர், இரண்டு காவலர்கள் அந்த அலுவலகத்தின் முன்பு பாதுகாப்புப் பணிக்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறை உதவி ஆணையாளர் சம்பவ இடத்தில் இருந்தபோதே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்கு வந்து சென்று இருக்கிறார். அப்போது அந்த அலுவலகக் கட்டிடத்திற்கோ வேறு பொருட்களுக்கோ எந்தவிதமான சேதமும் விளைவிக்கப்படவில்லை என்பதை காவல் துறை அலுவலர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இந்தச் சம்பவத்தை அரசியல் ஆக்கி யாரும் ஆதாயம் தேடக் கூடாது என்கின்ற எண்ணம் மட்டுமின்றி, பல்வேறு ஊகங்களுக்கும், தேவையற்ற அனுமானங்களுக்கும் இடம் தருகின்ற வகையில் செய்தித்தாள்கள் செய்திகளை வெளியிடக் கூடாது என்கின்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இவ்வளவு நீண்டதொரு விளக்கத்தைக் கொடுத்தேன். எங்களது அரசைப் பொறுத்தவரையில் தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், எத்தகைய ஒரு நிலையில் இருந்தாலும் அவர்கள்மீது சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்குத் தயங்கமாட்டோம், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தவற மாட்டோம் என்பதை நான் பலமுறை இதே சட்டமன்றப் பேரவையில் தெரிவித்திருக்கிறேன். இந்தக் குறிப்பிட்ட சம்பவத்திலும் காவல் துறையினர்

யாருடைய தூண்டுதலும் இன்றி, எந்த ஒரு நிர்ப்பந்தமும் இன்றி, சுதந்திரமாகச் செயல்பட்டு தங்களது கடமையை ஆற்றியுள்ளார்கள். திரு. தாமரைக்கனி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், எந்தக் கட்சியையும் சாராத ஒரு சுயேச்சை உறுப்பினர் ஆவார். அவர்மீது தவறு இருப்பதாகக் கண்டவுடன், அவர்மீது வழக்குப் பதிவு செய்து, அவரைக் கைது செய்து, பின்னர் நீதிமன்றக் காவலுக்கும் அனுப்பி வைத்துள்ளனர். இந்தச் சம்பவத்தை அரசியல் ஆக்கி அதன்மூலம் ஆதாயம் தேடுகின்ற முயற்சியை யாரும் மேற்கொள்ளக் கூடாது, மேற்கொள்ள வேண்டாம் என்று கூறிக்கொண்டு அமைகின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. (குறுக்கீடு) இதிலே வேண்டாம், எப்போதும் நாம் அனுமதிப்பதில்லை (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: இது தவறான செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, தவறான செய்தி அல்ல. எப்போதும் இதிலே விளக்கம் கேட்பதை அனுமதிப்பது இல்லை. (குறுக்கீடு) கவன ஈர்ப்புத் தீர்மானமாக, விதி 55-லே எடுத்துக் கொள்கிறபோது தான் அனுமதிப்பது. (குறுக்கீடு) தவறான தகவல் என்பதற்காக இந்த நேரத்தில் அனுமதிப்பது இல்லை. அது உங்களுக்கே தெரியும். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தவறான தகவலும் என்னால் இந்த அவைக்குத் தரப்படவில்லை. நான் ஏற்கெனவே இப்பொழுது சுட்டிக்காட்டியதுபோல, அன்றையதினம் தாமரைக்கனி, ராஜகோபாலைத் தாக்கிவிட்டார் என்று புகார் கொடுக்கப்பட்டதேயொழிய காங்கிரஸ் அலுவலகத்தில் பொருட்கள் சேதம் அடையச் செய்யப்பட்டன, நாசம் செய்யப்பட்டன என்று எல்லாம் எந்தப் புகாரும் கொடுக்கப்படவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் தொலைபேசியில் போலீஸ் கமிஷனரோடு பேசியபோது காங்கிரஸ் கட்சி அலுவலகத்தையே நிர்மூலமாக்கி விட்டார் என்று கூறினார். அதன் அடிப்படையில்தான் உடனடியாக காவல் துறை ஆணையாளர் அவர்கள், இரண்டு காவல் துறை அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்தார். ஒரு ஏ.சி., ஒரு டி.சி., அவர்களோடு இரண்டு காவலர்களையும் அனுப்பி, அங்கேயே அலுவலகத்தின் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டார்கள். அப்பொழுது கண்டறிந்தபோது, அங்கே எந்தப் பொருளுக்கும் வேறு எந்தச் சேதமும் ஏற்படவில்லை. எந்தப் பொருளும் நாசம் செய்யப்படவில்லை என்பதைக் கண்டறிந்து, அப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே அங்கே வந்தபொழுது, அதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எதற்காக உடனடியாக அங்கே காவல் துறை அதிகாரிகளை அனுப்பச் செய்தேன் என்றால், நிர்மூலம் செய்துவிட்டார் என்று சொன்ன உடன் நாங்கள் அங்கே ஆட்களைப் போடவில்லை

என்றால், இவர்களே உடனடியாக அங்கே சென்று ஆபீசை நிர்மூலமாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அங்குள்ள நாற்காலிகள், கண்ணாடிகளை உடைத்து, பின்னர் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக, யாரோ இதைச் செய்துவிட்டார்கள் என்று ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே சொல்லி, அரசியல் ஆதாயம் தேடப் பார்ப்பார்கள் என்பதற்காகத் தான் முன்னெச்சரிக்கையாக காவல் துறை அதிகாரிகளை அங்கே நிறுத்தி வைத்தேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், இதிலே வேண்டாம்.(குறுக்கீடு), தயவுசெய்து இதிலே விளக்கங்கள் வேண்டாம். (குறுக்கீடு) அதனால்தான் சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் தவறான தகவல் என்று சொன்னீர்கள், தவறான தகவல் இல்லை என்பதற்காகச் சொன்னேன். (குறுக்கீடு) தயவுசெய்து இந்த நேரத்தில் விளக்கம் கேட்பது வேண்டாம். (குறுக்கீடு)

முற்பகல் 11—35

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அதற்குப் பதில் சொல்லவில்லை. நிர்மூலமாக்கியதாக நான் சொல்லவில்லை. ஆனால் அங்கே நாற்காலி உடைக்கப்பட்டது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம். இதிலே விளக்கம் என்பது வேண்டாம். எப்போதும் அப்படி அனுமதிப்பது இல்லை. ஸ்பெஷன் மென்ஷனில் எப்போதும் அனுமதிப்பது இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, No matter how much the Opposition Leader may protest, I stand by every word of the statement I have made just now. (Thumping of Desks).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்தின்மீது சிலர் தீப்பந்தம் வீசியதால் ஏற்பட்ட ... (குறுக்கீடு)

திரு.எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, we want to stage a walk-out. (Interruption) we are staging a walk-out.

மாண்புமிகு பேரவைத் 'தலைவர்: வாக்-அவுட் பண்ணலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவல்களைத் தொடர்ந்து....